

விருதுநகர் மாவட்டம் , சிவகாசி சாட்சியாபுரத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ( இரயில்வே திட்டப்பணிகள் ) சார்பில், ரூ .61.74 கோடி மதிப்பில் புதிய இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு , சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் மற்றும் சிவகாசி சார் ஆட்சியர் ந.பிரியா ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்கள் . உடன் சிவகாசி மாநகர செயலாளர் உதய சூரியன் இருந்தார்.

## செவ்வாய் கிரகத்தில் பாறை கண்டுபிடிப்பு!

வாஷிங்டன். ஜூலை 29-

ரோவர் செவ்வாய் கிரகத்தில் பாறைஒன்றை செவ்வாய் கிரகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாறை அங்கு பல ஆயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்பு நுண் நுண்ணுயிரிகள் வாழ்ந்ததை காட்டுகிறது.

அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக கடந்த 2020ம் ஆண்டு ஜூலை 30ம் தேதி விண்கலம் ஒன்றை அனுப்பியது. அந்த விண்கலம் செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கிய நிலையில் அதில் அனுப்பப்பட்ட 'பெர்சிவியரன்ஸ்' (தமிழில் விடாமுயற்சி) என்ற ரோவர் செவ்வாய் கிரகத்தை ஆராய்ந்து வருகிறது. இந்த நிலையில் அந்த ரோவர் செவ்வாய் கிரகத்தில் பாறை ஒன்றை கண்டு பிடித்துள்ளது.

செவ்வாய் கிரகத்தில் உள்ள ஒரு பழங்கால நதி பள்ளத்தாக்கான 'நெரெட்வா வாலிஸ்'ன் வடக்கு விளிம்பு பகுதியை ஆய்வு செய்யும் போது அம்பு முனை வடிவ பாறையை பெர்சிவியரன்ஸ் கண்டெடுத்ததாக நாசா எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளது.




# திருப்பத்தூரில் ரூ. 5கோடியில் 11 புதிய பேருந்துகள் இயக்கம்!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, ஜூலை 29-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் காரைக்குடி மண்டலத்தின் சார்பில்ருபாய் 5 கோடியில் புதிதாக வாங்கப்பட்ட 11 புதிய பேருந்துகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கும்நிகழ்ச்சி தேவகோட்டை கோட்டாட்சியர் எஸ்.பால்துரை தலைமையில் கார்த்திப.சிதம்பரம் எம்.பி. முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர் . பெரிய கருப்பன் 11 பேருந்து வழித்தடங்களை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசிரவிக்குமார், எஸ்.மாங். குடி, பேரூராட்சித் தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், ஒன்றிய குழு தலைவர் எஸ். சண்முகவடிவேல், ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். முன்னதாக அரசு போக்குவரத்து கழக கும்பகோணம் கோட்ட நிர்வாக இயக்குனர் மகேந்திர குமார் வரவேற்றுப் பேசினார். இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் கலந்துகொண்டு பேசியதாவது.

மக்களின் தேவைகளை அறிந்து செயல்படும் அரசாக முதல்வர் தளபதி தலைமையி லான அரசு உள்ளது. அனைத்து அரசு துறைகளும் முன்னேற வேண்டும். அரசின் திட்டங்கள் மக்களுக்கு போய் சேரவேண்டும் என்ற எண்ணத்தில் முதல்வர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி நிறைவேற்றி வருகிறார் .முதல்வர் தளபதி தலைமையிலான அரசு மக்களின் சுமை தாங்கி அரசாக உள்ளது. தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில் அனைத்து மக்களும், ஏழை, எளிய மக்கள், நடுத்தர, பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வியில் வளர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கல்விக்காக முக்கியத்து வத்தை கொடுத்தார். இதனால் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி அதிகரித்தது. அதை தொடர்ந்து முதல்வர் தளபதி அவர்களும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். இந்தியாவிலேயே தமிழகம் உயர் கல்வித்துறையில் 54 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது. ஒரு தொலைநோக்கு பார்வையுடன் தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. பல்வேறு வகையில் இந்த அரசுக்கு நிதி நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது. ஆனால் அதையெல்லாம் சமாளித்து ஈடு செய்து தளபதி அவர்கள் தமது ஆட்சியை நடத்தி வருகிறார். 10ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியினால் நிதி இழப்பு ஏற்பட்டது. அதை ஈடு கட்டும் வகையில் முதல்வரின் ஆலோசனை. யின் பேரில் அரசுத்துறைகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கல்வித் துறைக்கு தமிழக முதல்வர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார் .இதற்காக கல்வித்துறைக்கு வேண்டிய ரூபாய் 47 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கிடு செய்து உள்ளார். எனவே கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் நாடு வளர்ச்சி பெறும். விலைவாசி உயர்வினையினை கட்டுப்படுத்த வேண்டும். மக்களுக்கு வழங்கப்படும் நியாய விலை கடைகள் மூலம் வழங்கப்படும் பருப்புவகைகள்,பாமாயில் போன்ற உணவுப் பொருட்களுக்காக ரூபாய் 10500 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார் . தமிழக அரசு போக்குவரத்து கழகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதற்காக ரூபாய் 8000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அனைத்து கிராமங்களிலும் நகரங்களிலும் அடிப்படை வசதி செய்திட வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்த முயற்சி இன்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கழகம் ஆட்சிக்கு வரும்போது எல்லாம் கிராமங்கள் முன்னேற்றம் அடைகின்றது. அடிப்படை வசதியான சாலை வசதி, போக்குவரத்து வசதி, மிக முக்கிய மாகும். அதை செய்து தருமாறு முதல்வர்அவர் கள் உத்தரவிட்டுள்ளார். கடந்த அ.தி. மு.க.10 ஆண்டுகால ஆட்சியில் புதிதாக பேருந்துகள் ஏதும் வாங்கவில்லை. தற்போது முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற தும் 7450 புதிதாக பேருந்துகள் வாங்குவதற் கான உத்தரவுகளை பிறப்பித்துள் ளார். தமிழக போக்குவரத்து துறையில் 23 ஆயிரம் பேருந்துகள் உள்ளது .மக்கள் சேவையில் அரசு போக்குவரத்து கழகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. லாபத்தை நோக்காமல் இந்த துறை செயல்பட்டு வருகிறது . ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழகத்திற்கு எந்த நிதியும் ஒதுக்கவில்லை. மாற்றான்தாய் மனப்பான்மையுடன் ஒரவஞ்சனையுடன் செயல்படுகிறது . ஒன்றிய அரசு தமிழக அரசுக்கு நெருக்கடிகளை பல்வேறு வகையில் கொடுத்து வருகிறது . அரசிற்கு எதிராக சதி திட்டம் தீட்டி வருகிறது. இதையெல்லாம் முறியடித்து மக்களுக்காக செயல்படும் அரசு தலைவர் தளபதி தலைமையி லான திராவிட மாடல் அரசாகும். முதல்வருக்கு மக்கள் பேராதரவினை தொடர்ந்து தந்து வருகிறார்கள். அதன் வெளிப்பாடு தான் கடந்த மே மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 40 இடங்களில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றது. எனவே தமிழர் கள் என்றும் நன்றியுணர்வு டன் இருப்பார்கள் .இந்த நன்றி தொடர்ந்திட வேண்டும். இலவச மகளிர் பயணம் மூலமாக தினசரி 60 லட்சம் பேர் பயணிக்கிறார்கள். இது ஒரு பெரிய முற்போக்கான வளர்ச்சி திட்டமாகும். இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசினார்.

அரசு போக்குவரத்து. கழக பொதுமேலாளர் ஆர். இளங்கோ நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் பேரூர்கழக செயலாளர் ஆர். கார்த்திகேயன் தொ.மு.ச. செயலாளர் பச்சைமால், அப்துல் முத்தலிபு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன் ஒன்றிய செயலாளர் நா.நெடுஞ்செழியன், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், வட்டாட்சியர்கள் மாணிக்கவாசகம், நேரு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், தகவல் தொழில்நுட்ப அணி காளிமுத்து, புதூர் கண்ணன், சன் சீமான் சுப்பையா, மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி, வர்த்தக அணி ருக்மா சரவணன், ராம. ரவி, ஷாஜகான்,ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன், உட்பட தொ.மு.சநிர்வாகிகள்மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்!

# புதுக்கோட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம்! 5 ஆயிரம் கழகத்தினர் கண்டன முழக்கம்!

## முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் கண்டன உரை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை ஜூலை 29-

தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் பாஜக ஒன்றிய அரசை கண்டித்து 27ஆம் தேதி சனிக்கிழமை புதுக்கோட்டை வடக்கு மற்றும் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக சார்பில் புதுக்கோட்டை திலகர் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் கண்டன உரையாற்றினார்.

இதில் கழகத்தினர் பெரும் திரளாக அலைகடலென திரண்டு வந்து பங்கேற்றனர். நிகழ்வுகளில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா, எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், மிசா சி.ராமநாதன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, கே.ஆர்.என். போஸ், அரு.வீரமணி, அழ.சுப்பிரமணியன், க.மதியழகன், பி. ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, எம். லியாகத் அலி, அபுதாஹீர், ஆ.செந்தில், சு.சண்முகம், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா. ஆனந்த், எஸ்.ஜெயராமன், தென்னலூர் எம். பழனியப்பன், என்.சாத்தையா, இராசு. சந்தோஷ், சி.ஆர்.வி. சித்ரா, எம்.செந்தில் குமார், ஆர்.வி.செல்வம், கலைவாணி சுப்பிரமணியன், என். வீரய்யா, ஆர்.செல்லத்துரை. த. மணிராஜன், க.ராஜேந்திரன், கே.எஸ்.சந்திரன், மு.க. ராம கிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், பொன்.ராமலிங்கம், எம். பரமசிவம், வெ.முத்துக் கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, என். சேட்டு, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து. ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், அ. இளங்குமரன், கே.பி. அய்யப்பன், சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், கே. பி.கே.டி.தங்கமணி, சக்தி ராமசாமி, வே. பொன்துரை, பொன்.கணேசன், அ.முத்து, அரு.வடிவேல், அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், வி.ஆர். இளையராஜா, எஸ்.எம்.சீனியார், கே. எஸ்.ரவி, எல்.குமார், உமுருகேசன், அ. அழகப்பன், கே.சி.சிவக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், ஆ.பழனிக்குமார், பி. அண்ணாத்துரை, ஜெயலெட்சுமி தமிழ்ச் செல்வன், எம்.எம். பாலு, சி.அரங்கநாயகம்,

தவசுமணி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் செ. குறிஞ்சி வாணன், டாக்டர் சுதர்சன், பொன்.பாரி, தி.முத்து, பாத்திமா பீவி, தேவி, விமலாதி, ராஜா, கே.ஆர்.ராமசாமி, முத்துக் குமார், புத்தாம்பூர் சுப்பையா, டி.எம். ஆர்.ராமமூர்த்தி டி.வளர்மதி, கே.கணபதி, அ.ரெத்தினம், குமரேசன், கருணாகரன், டாக்டர் சுதர்சன், எஸ்.வி.ஆர்.ஜெய்ஸ்டாலின், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், அ.பிரபா, தவசுமணி, மேகநாதன், கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன்,இரா.தமிழ் ராசு, கவிக்குமார்,

நசுருதீன், விளாப்பட்டி சிவா, முகம்மது ரபீக், சே. அருண்குமார், இளையராஜா, அன்சாரி பாஷீத், மு.பி.மணி, மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, வெற்றிச் செல்வன், டாக்டர் சதீஷ், மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, மாலா ராஜேந்திரதுரை, உஷா செல்வம், டி.செல்வம், கை. பழனிச்சாமி, எம்.பி. சரவணன், மழையூர் ராமசாமி, டி.அப்புக்காளை, பழனி தேவா, கனகம்மன் பாபு, டி. சுப்பிரமணியன், வழக்கறிஞர் எம்.செந்தில்குமார், டாக்டர் அமானுல்லா, சுந்தர்ராஜ், தெய்வானை, ராயல் சபா, எம்.டி.ராமசாமி, மு. ராஜதுரை, முல்லை ரமேஷ், செ. ரமேஷ், எம்.கே.அறிவுடை நம்பி, செ.கணேஷ், அரவிந்த், எம்.ரமேஷ், வடவாளம் க.செ.மணிமாறன், அற்புத ஹென்றி, சையது முகம்மது, இனியன், எழில் ராஜா, இதயம் அப்துல்லா, கேஆர்.பாலமுத்து, தட்டாம்பட்டி ஆறுமுகம். என்.ஆர்.பரிமளம், கி.சுப்பிரமணியன், வை. நடராஜன், கா.கைலாசம், பா. ரெங்கராஜ், ஆ மரிய எட்வின், மா.மணிவேலன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், ஜேம்ஸ், பிரேம் ஆனந்த், திருமயம் ராஜன், ஆலயம் ஆனந்த, ஆர்.எம். சத்யா, விஜயகுமார், கண்மணி சுப்பு, ராமச்சந்திரன், முத்துக்கருப்பன், தனபால், மாலையீடு பிரபு, வாஹித் அலி, இனியன், திலிபன், அப்பாஸ் அலி, ஆலவயல் முரளி சுப்பையா, மற்றும் அணிகளின் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் 5000 க்கும் மேற்பட்டோர். கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. - க.சுப்பிரமணியன் பங்கேற்பு

# நெல்லை - கிழக்கு - மத்திய மாவட்டம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் கண்டன உரை!

நெல்லை, ஜூலை 29-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்டம் சார்பில் நெல்லை சந்திப்பு இரயில் நிலையம் முன்பு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன்,மாவட்ட அவைத் தலைவர்கள் கிரகாம்பெல், முருகன்,

மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஒன்றிய அரசை கண்டித்து திருநெல்வேலி அல்வா, அவித்த முட்டை விநியோகம் செய்யப்பட்டது.முட்டையை கையில் ஏந்தியபடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்நிகழ்வில் மாநில மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி பங்கேற்று கண்டன உரையாற்றினார்.

நிகழ்வில் மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம்,ஏ.எல். எஸ்.லட்சுமணன், பேச்சிபாண்டியன், சித்திக்,பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ், கே. ஆர். ராஜ்,பி.எம்.சரவணன்,நடராஜன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் நம்பி, மாஞ்சோலை மைக்கேல்,தமயந்தி, தர்மன், எஸ்.வி.சுரேஷ், கிரிஜா குமார், பொருளாளர் வண்ணை சேகர்,ஒன்றிய செயலாளர்கள் தங்கபாண்டியன்,போர்வெல் கணேசன், வேலங்குளம் கண்ணன், செல்வ கருணாநிதி, ராஜன், ஜோசப்பெல்சி, ஆரோக்கிய எட்வின், ஜெகதீஸ், பரணி சேகர், அன்பழகன்,அருள் மணி, மாரியப்பன், முத்துப் பாண்டி என்ற பிரபு,

நகர செயலாளர்கள் கணேசன், பிரபாகர பாண்டியன்,பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம், சுப்பிரமணியன்,துபாய் சாகுல்,அன்டன் செல்லத்துரை,அணி அமைப்பாளர்கள்,ஜான்ரபீந்தர்,மல்லிகா அருள்,பிரேமா,நெல்லையப்பன், நெடுஞ்செழியன்,எல்.முருகன்,என். முருகன்,திருப்பதி ஜெயசீலன், மாடசாமி ராஜபாண்டியன், அன்வர் உசேன், பிரகாஷ், ரகுமான், ஜோசப்ஆரோக்கிய ராஜ்,பலராமன்,பொன்னையா பாண்டியன்,வில்சன் மணித்துரை,

கருப்பசாமி கோட்டையப்பன், காமினிதேவன். அனிதா,நவ்ஷாத், துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன்,அலிஃப்மீரான்,இனியன், முருகன், தவசிராஜன், எல்.ஐ.சி. பேச்சிமுத்து, உத்தரநாயகம்,மாயா,அனுராதா,தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி,வழக்கறிஞர்கள் ராஜாமுகம்மது,தினேஷ், மண்டல தலைவர்கள் ரேவதிபிரபு,மகேஸ்வரி செந்தில்,கதீஜா இக்லாம் பாசிலா, பிரான்சிஸ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், சாலமோன் டேவிட், ஜான்ஸ் ரூபா,லிங்கசாந்தி, சத்தியவாணி முத்து,மாமன்ற உறுப்பினர்கள் பிரபா சங்கர், உலகநாதன்,கிட்டு என்ற ராமகிருஷ்ணன்,சகாய ஜூலியட், பேச்சியம்மாள், சுப்புலட்சுமி,டாக்டர் சங்கர், மாரியப்பன், கந்தன், சின்னத்தாய், சுப்புலட்சுமி, அமீர் பார்த்து, வசந்தா, கீதா, கோகுல வாணி,அலிஷேக் மன்சூர்,சேக் மன்சூர்,ரம்ஜான் அலி,துணைச் செயலாளர்கள் அப்துல் கையூம்,

மூளிகுளம் பிரபு,சுதாமூர்த்தி, பொறியாளர் அணி சாய்பாபா,இசக்கி பாண்டியன்,மாநகரப் பொருளாளர் அண்ணாதுரை,முன்னாள் பொருளாளர் அருண்குமார்,நெல்லை ரவி,மைக் மணி,

பேரூர் செயலாளர்கள் முத்து கணேசன், இசக்கி பாண்டியன், சுப்பையா, மனிஷா செல்வராஜ்,மணிகண்டன், தி.வானுமாமலை,எம்.வானுமாமலை, முருகையா,அயூப்கான்,கசமுத்து உள்பட கழக நிர்வாகிகள்,மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

காரைக்குடியில் கலைஞர் தமிழ்ச் சங்கத்தின் சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா. கலைஞர் தமிழ்ச்சங்கம் 27 ஆம் ஆண்டு விழா!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமை. சுகிசிவம் தலைமையில் பட்டிமன்றம்

சிவகங்கை. ஜூலை 29-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கலைஞர் தமிழ் சங்கத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, கலைஞர் தமிழ்ச்சங்கத் தின் 27வது ஆண்டுவிழா சிறப்பு பட்டிமன்றம் பி. எல். பி. திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் தொழிலதிபர் புரவலர் பழ.படிக்காசு முன்னிலையில் நடைபெற்றது. காரைக்குடி நகர்மன்ற தலைவர் சே.முத்துதுரை வரவேற்றுப் பேசினார். விழாவில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ.மாவட்ட கழக பொருளாளர், முன்னாள் எம்.எல்.ஏ. சுப. துரைராசு, நகர மன்ற துணை தலைவர் நா.குணசேகரன்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். கலைஞர் தமிழ் சங்க நிறுவனர், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பட்டிமன்றத் தினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்த விழாவில் கலைஞரை உலகம் புகழ பெரிதும் காரணம் எழுது கோலே செங்கோலே என்ற தலைப்பில் செல்வேந்தர் சுகிசிவம் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. எழுது கோலே என்ற தலைப்பில் செந்தமிழ்ச் செல்வி திருமதி தெ. சாந்தமணி, எழுத்தாளர் லெட்சுமண பெருமாள், கவிஞர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி, ஆகியோர் வாதிட்டார்கள். செங்கோலே என்ற தலை ப்பில் கவிஞர் மதுக்கூர் ராமலிங்கம், முனைவர் திருமதி எழிலரசி, சே.மோகன சுந்தரம், ஆகியோர் வாதிட்டார்கள். நிகழ்ச்சி முடிவில் நடுவர் சுகிசிவம் கலைஞரை உலகம் புகழ பெரிதும் காரணம் எழுதுகோலும் செங்கோலும் என்று தீர்ப்பு கூறினார் கலைஞர் தமிழ் சங்கத்தின் செயலாளர் தி. செந்தில்குமார் நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், கே.எஸ். எம். மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, மற்றும் நகர் கழக ஒன்றிய கழகச் செயலாளர்கள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் பல்வேறு அணி நிர்வாகிகள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்நிகழ்ச்சி ஏற்பாடுகளை கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனரும் முன்னாள் அமைச்சருமான மு.தென்னவன் தலைமையில் கலைஞர் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

குளித்தலை 16வது வார்டு கழகச் செயலாளர்

# ஏ.சுரேஷ் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 29-

கரூர் மாவட்டம், குளித்தலை நகராட்சி 16வது வார்டு கழகச் செயலாளரும் நகர்மன்ற உறுப்பினருமான ஏ.சுரேஷ் மறைவிற்கு கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

கரூர் மாவட்டம், குளித்தலை நகராட்சி, 16வது வார்டு கழகச் செயலாளரும், 16வது வார்டு குளித்தலை நகர் மன்ற உறுப்பினருமான ஏ.சுரேஷ் (வயது 53) அவர்கள் 27.07.2024 அன்று சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்பதை அறிந்து வருந்தினேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.